முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**EA.145/2023 in EP.84/2009 in OS No.182/1992**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 27.10.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 27.10.2025 | சாட்சி | ம.சா.1 |
| பெயர் | வீரப்பன் | வயது.. | 67 |
| தந்தை பெயர்.. | ராமு | கிராமம்.. | பி.முட் லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. ஜீவரத்தின நாடரை தெரியாது. அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்று தெரியாது. ஜீவரத்தின நாடார் சகோதரிகள் பாகவழக்கு போட்டு மனு சொத்தை ஒப்புதல் பெற்ற விபரம் எனக்கு தெரியாது. மனுதார்கள் சொத்தை கிரயம் பெற்றது நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த கணபதி என்பவரை எனக்கு தெரியாது. நான் 65 வருடமாக அதே கிராமத்தில் தான் வசிக்கிறேன் கணபதி என்பவரை கேள்வி பட்டது இல்லை. 2006 வருடத்தில் அரசு நெடுஞ்சாலை போடுவதற்காக சரவணன் சங்கர் கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. கிரய தொகை, விபரம் எனக்கு தெரியாது. எவ்வளவு செண்ட் நெடுஞ்சாலையில் எடுத்துக்கொண்டார்கள் எனறால் 1 1/2 செண்ட் அதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. மனுதார்கள் வீடு கட்டி சுமார் 25 வருடம் இருக்குமா என்றால் 15 வருடம் இருக்கும். முதலில் கூரை வீடா, ஓட்டு வீடா என்றால் தெரியாது, தற்போது சிமெண்ட் தரை போட்ட வீடு உள்ளது.

2. மனு தாரர்கள் மனு போட்டதன் விபரம் தெரியாது. மனுவை படித்து பார்க்கவில்லை. நான் 65 வருடமாக பி.முட்லூர் கிராமத்தில் இருப்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.